ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை



வேணு : 11 | ஏப்ரல்– 2006 | கானம் : 9

www.madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில்
## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துவமுகாம் சிறப்பு நிகழ்ச்சிகள்



Dr. M. Mahalakshmi
Deputy Director
Saidapet, H.U.D
Chennai.

### கண் மருத்துவ முகாம்

இடம் : மதுரபுரி, மஹாரண்யம்
தேதி : 26.02.2006



Mr. Lawrence Prabakar
Ophthalmic Asst.
Manampathi Primary
Health Centre.



ஸ்ரீ ஹரி:






ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி
திருக்கோயில்,
சங்கரன் பாளையம், வேலூர்,
தேதி : 12.03.2006



"ஹரேராம..."
நகரசங்கீர்த்தனம்
இடம் : பெரியகுளம்
(தேனி மாவட்டம்)
தேதி : 18.03.2006

ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை
இடம் : பெரியகுளம்
(தேனி மாவட்டம்)
தேதி : 18.03.2006



# மதுரமுரளி

Rs. 5/-

Registered as Newspaper in India R. No. 62828 / 95

Regd. No. TN / CC (S) DN / 119 / 06-08

Licensed to Post without prepayment WPP NO.TN / CC (S) DN / 51 / 06-08

| வேணு : 11 | ஏப்ரல் – 2006 | கானம் : 9 |
|---|---|---|




ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரை

இடம் : யோகி ராம்சுரத்குமார் பஜனை மந்திரம்

ஸ்ரீராம்ஜி காலனி, ஒசூர்

தேதி : 16.03.2006


Published by V. Sankaran on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No. 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600 083 and Printed by Mrs. Sri. Kalaivani of Sri Maruthy Laser Printers, 200 (173), Peters Road, Chennai - 600 014. Editor : S. Sridhar. Website : www.madhuramurali.org;

e-mail : contact@madhuramurali.org ; publications@madhuramurali.org

ஸ்ரீ ஹரி:

ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு : 11 ஏப்ரல் 2006 கானம் : 9

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 124 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 10 |
| 4. | மாதம் ஒரு புத்தகம் | 11 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 96 | 14 |
| 6. | ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 11 | 16 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 99 | 18 |
| 8. | மாலே மணிவண்ணா! - 43 | 21 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் (தொடர்ச்சி) | 24 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 124 | 26 |
| 11. | செய்திகள் | 29 |


**மதுரமுரளி வாசகர்களுக்கு**
**“ஸ்ரீவிய” தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்களைத்**
**தெரிவித்துக் கொள்கிறோம்.**

**-ஆசிரியர்**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

## திருப்பள்ளியெழுச்சி

ராகம் : பூபாளம் தாளம் : ஆதி

*பக்தர்களை மயக்கும் ப்ரேமிகவரத*
*பொழுதுபுலர்ந்ததை அறியாயோ? நீ*
*தேவர்களும் தொழும் தேவசிகாமணே*
*பள்ளி எழுந்தருளாயே!*

*தட்டொளி காட்டி, ஆலிங்கனம் செய்து,*
*பாலும் தருவேன் பன்னகசயனா*
*பக்தருள்ளம் குளிர கள்ளப்பார்வையுடன்*
*பள்ளி எழுந்தருளாயே!*

*முத்தமும் தந்து முகத்தைத் துடைத்து*
*கேசம் வருடி கேசவனே - உன்*
*கேளிக்கைகளைக் காண ஆவல்கொண்டேன்*
*பள்ளி எழுந்தருளாயே!*

*மாதுரீஸகியின் மாதுர்யத்தில்*
*மையல் அடைந்தாயோ ப்ரேமிகவரத!*
*முரளீதரன் தாபத்தை அறியாயோ-நீ*
*பள்ளி எழுந்தருளாயே!*

Copyright of articles published in **'MADHURAMURALI'** is reserved. Reproduction of any article from **'MADHURA MURALI'** requires written consent from the Publisher.

அண்மையில் ஒரு அன்பர், ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் பேசிக் கொண்டிருக்கும்பொழுது, ''எனது நெருங்கிய நண்பர், கோவில்கள், இறைவழிபாடு முதலியவற்றை ஏற்றுக்கொள்ளாதவர். அவர் என்னிடம், பலர் உணவுக்குக் கஷ்டப்படும்பொழுது, கோவிலில் உள்ள ஸ்வாமிக்கு, அபிஷேகம், ஆராதனை என்ற பெயரில், பால், தயிர் போன்ற திரவியங்களை வீணடிக்கின்றனரே! இவையெல்லாம் தேவைதானா? என்று கேள்வி கேட்டார். அவர் கேட்டதை யோசித்துப் பார்க்கும்பொழுது, அவர் சொல்வதும் நியாயம்தானே! என்று தோன்றுகின்றது. எங்கும் நிறைந்திருக்கக்கூடிய, எல்லையில்லா சக்திகொண்டப் பரம்பொருளை, ஒரு கோவிலில், மூர்த்தியாக அடக்கி வழிபடுவது மூடத்தனமோ! என்றும் எனக்குத் தோன்றுகின்றது. இதற்கு தாங்கள் விளக்கம் தரவேண்டும்'' என்று கேட்க, ஸ்ரீ ஸ்வாமிஜியும், அந்த சந்தேகத்திற்கு நீண்டதொரு விளக்கம் அளித்தார்கள். அது சுவாரஸ்யமாக இருந்ததால், அதை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாமே! என்று எழுதுகின்றேன்.

''ஒருவன், தன் வீட்டில் வேலை செய்பவனுக்கு, தான் செய்த நன்மைகளை எல்லாம் பட்டியல் இட்டுச் சொல்கின்றான். அதைவிட, கதியற்றவர்களுக்கு தான் ஏதாவது நன்மை செய்திருந்தால், அதையும் பட்டியலிட்டு சொல்லிச் சொல்லிக் காண்பிக்கின்றான். அதை நினைத்து நினைத்துப் பெருமைப்படுகின்றான். அதே சமயத்தில், யாருக்கும் தெரியாமல், உள்மனதிற்குள், ''நாம் ஏன் இதையெல்லாம் செய்தோம்! இவை அவசியம்தானா?'' என்று தடுமாறுகின்றான். ''அதிகமாகதான் செய்துவிட்டோமோ?'' என்று கூடச் சில சமயங்களில் மனதிற்குள் அங்கலாய்க்கின்றான். இவன், எதைக் கருத்தில்கொண்டு அவற்றை எல்லாம் செய்தானோ, அதற்கான பலன் கிடைக்கவில்லை என்றால், வெறுப்பு அடைகின்றான். ஆத்திரம் அடைகின்றான். ஆனால், அதே மனிதன், தன் காதலிக்கோ, மனைவிக்கோ, பிரியமான குழந்தைகளுக்கோ

செய்த நன்மைகளை நினைத்துப் பெருமைப்படுகின்றானா? வெளியில் தம்பட்டம் அடிக்கின்றானா?

முடிந்த வரையில், வெளியில் தெரியாமல் இருப்பது நல்லது. தெரிந்தால், திருஷ்டி பட்டுவிடும் என்றுதானே பார்க்கின்றான். ஏன் என்றால், வேலைக்காரனும், மற்றவர்களும் அவனைப் பொருத்த வரையில் வேறு யாரோ! அவர்களிடம் அன்பு இல்லை. அன்பு இல்லாதவர்களுக்குச் செய்வதெல்லாம் சுமையாகவும் சந்தேகத்துடனும் செய்யப்படுகின்றன. அதே சமயம், தன் காதலி, மனைவி, மக்கள் இவர்களிடம் அன்பு இருந்ததால், அவர்களுக்காக தான் படும் சிரமங்களைப் பற்றி, கேள்வியே அவனிடம் எழுவதில்லை. எந்த விஷயத்தில் கேள்வி எழுகின்றதோ, அந்த இடத்தில் உனக்கு அன்பு இல்லை என்று பொருள். அந்த அன்பு, எந்தக் கேள்வியையும் கேட்காது.

இந்த உலகத்தைப் படைத்து, நம்மையும் படைத்து, படைத்தவனையும் இல்லை என்று சொல்வதற்கு ஒரு சுதந்திரம் கொடுத்துள்ளானே இறைவன், அவனைவிடக் கருணையுள்ளவன் உலகத்தில் யாராவது இருக்க முடியுமா என்ன? ஒருவன், இறைவன் இல்லை என்று சொல்வது எதைப் போன்றது? என்றால், 'நாவால் பேசிக்கொண்டே நாக்கு இல்லை' என்று சொல்வது போன்றது. ஏன் என்றால், அந்தச் சைதன்யம் உள்ளே இருப்பதால்தானே நீ சிந்திக்கின்றாய்! பேசுகின்றாய்! அந்த இறைவன், மனிதனுக்கு, அதுவும் பக்தனுக்கே கடைசி முக்கியத்துவம் வாய்ந்தவனாகப் போய்விட்டான்! அதனால்தான் கேள்வி எழுகின்றது.

முதலில், நாம் ஏன் இறைவனை அடைய வேண்டும்? என்று பார்ப்போம். உலகத்தில், நான்கு முகங்களை உடைய பிரஹ்மா முதற்கொண்டு சிறிய எறும்புவரை ஏதோ ஒரு காரியத்தில் ஈடுபட்டுக்கொண்டே இருக்கின்றனர். எதற்காக? சுகத்திற்காகத்தான். எல்லோருக்கும், சுகமாக இருக்கவேண்டும் என்றுதான் ஆசை. ஆனால், நம்மால் அப்படி இருக்க முடிகின்றதா? சுகம், கிடைப்பது போல் இருக்கின்றது. ஆனால், துக்கம்தானே விஞ்சுகின்றது. பட்டம், பதவி, பணம், மனைவி, குழந்தைகள், தீர்க்கமான ஆயுள் எதுவுமே இவன் எதிர்பார்த்த சுகத்தைக் கொடுப்பதில்லை.

இன்றுவரை துக்கம் வராதபோதிலும், நாளை வராது என்று கூறிவிட முடியாது. ஏன் என்றால், எப்பொழுது துக்கம் பிறருக்கு ஏற்படுகின்றதோ, அப்பொழுது துக்கம் நமக்கும் வரும் என்றாகிறது அல்லவா! நாம் சரியாக இருந்தால், துக்கம் வராதே என்றால், இப்பொழுது துக்கத்திற்குக் காரணம், நாம் இன்று சரியாக இருப்பதும் தவறாக இருப்பதும் அன்று. நாம், முன்பு செய்த கர்ம வினைகளே துக்கத்திற்குக் காரணம்.

முதலில், இறை தியானத்தால் சுக துக்கங்களை மாற்றிக் கொள்ள முயற்சி செய்வதைவிட, அவை நம்மைப் பாதிக்காமல் இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். பிறகு, அவற்றைப் பற்றிய சிந்தனையே இல்லாத, ஆழ்ந்த, ஆனந்தமான சமாதியில் ஒன்றிவிட வேண்டும். பிறகு, துக்கம் என்பதே கிடையாது. ஏன் என்றால், இரண்டாவது என்ற ஒரு பொருளே கிடையாது. இதுதானே அத்வைதம்! ஆகவே, உலகத்தில், உலக வாழ்க்கையில் நாட்டமுள்ளவர்கள், இறைவாழ்க்கையில் நாட்டமுள்ளவர்கள் என்ற இருபாலர்கள் கிடையவே கிடையாது. எல்லாருமே, சுகத்தில் நாட்டமுள்ளவர்கள்தாம். உலகமக்கள், அந்தச் சுகத்தைத் தவறான இடத்திலும், தவறான விதத்திலும் தேடுகின்றார்கள். ஆன்மீக சாதகர்களோ, அதைச் சரியான இடத்தில், சரியானவிதத்தில் தேடுகின்றார்கள். அதுதான் வேறுபாடு. இப்படி இருந்தபோதிலும், ஞானிகளுடைய வாழ்க்கையே உயர்ந்ததாக இருக்கின்றது.

உலகமக்கள், உலக வாழ்க்கையைச் சுகம் என்று நினைத்து, ஏமாந்து, துக்கப்படும்பொழுது, ஆன்மீக வாழ்க்கைக்கு வந்தாலும் வரலாம். ஆனால், பிரஹ்மத்தை உணர்ந்த ஞானிகள், ஒருக்காலும் தங்கள் வாழ்க்கை கசந்து, உலக வாழ்க்கைக்கு வரப்போவதில்லை. ஆகவே, இறையாளர்களின் வாழ்க்கையே உயர்ந்தது. இத்தகைய உயர்ந்த நிலையை அடைவதற்கு, பெரும்பாலான மக்களுக்கும் சுலபமாகப் பயன்படக்கூடிய எளிய வழிபாட்டு முறையே கோவில் வழிபாடாகும்.

முதலில், கோவில் என்றால் என்ன? என்று பார்ப்போம். எங்கும் வியாபித்திருப்பவன்தான் ஈஸ்வரன். அவன் இல்லாத இடம் இல்லை. பிறகு, அவனுக்கென்று ஓர் இடம் எதற்கு? அவனோ, எப்பொழுதும் சுத்தமானவன். அவனுக்கு அபிஷேகம் எதற்கு?

அவனுக்கு அன்னியமான ஒரு பொருள் இல்லை. அவனுக்கு அலங்காரங்கள் எதற்கு? நித்ய திருப்தனான அவனுக்கு நிவேதனங்கள் எதற்கு?

இந்த உலகம், தெய்வத்திற்கு வசப்பட்டது. அந்தத் தெய்வமோ மந்திரத்திற்கும், பக்திக்கும் வசப்படக்கூடியது. அந்தத் தெய்வசக்தியை மந்திரத்தாலும், பக்தியாலும் சிரத்தையுடன் பிரதிஷ்டை செய்து வழிப்படக்கூடிய இடம்தான் ஆலயம். ஆலயம் என்பதே, உடலின் ஒரு கூறுதான்.

ஸ்ரீ ரங்கநாதர் (ஸ்ரீரங்கம்) கோவிலில் உள்ள ஏழு பிரகாரங்களும் உடலில் உள்ள ஏழு யோக சக்கரங்களைக் குறிப்பது. அநேகமாக, எல்லாச் சிவாலயங்களிலும் உள்ள ஐந்து பிரகாரங்களும் உடலில் உள்ள ஐந்து கோசங்களைக் குறிப்பன. காஞ்சீபுரம், ஸ்ரீ காமாட்சியம்மன் கோவிலில் உள்ள மூன்றரைச் சுற்று பிரகாரம், நமது உடலில் முதுகுத் தண்டுவடத்தின் கீழ் மூன்றரைச் சுருளாக குண்டலினி சக்தியானது சுற்றி வைக்கப்பட்டுள்ளதைக் குறிக்கின்றது. எந்தப் பெருமாள் கோவிலுக்குச் சென்றாலும், சேஷ வாஹனம், மூன்றரைச் சுற்றாக இருப்பதைக் கவனிக்கலாம். எல்லாக் கோவில்களில் உள்ள கொடி மரமும் முதுகுத் தண்டுவடத்தைக் குறிக்கும்.

மூலாதாரத்தில், தன்னுடைய சக்தி அறியாமல் உறங்கி இருப்பதுதான் கணபதி. பிரஹ்மச்சரியத்தினால்தான் அதை எழுப்ப முடியும். அதனால், கணபதியைத் தவறாக எழுப்பினால் யானைக்கு மதம் பிடிப்பதுபோல் பிடித்துவிடும். இதை, மேல் நோக்கி எழுப்பினால் பாம்புபோல் கிளம்பும். இதுதான் சுப்பிரமண்யர். மூலாதாரத்தில் இருந்து கிளம்புவதால், அவர் கணபதியின் தம்பி. அந்த நாடியில் ஆறு முடிச்சுகள் உள்ளதால், சுப்பிரமண்ய ஸ்வாமிக்கு ஆறுமுகம்.

சுப்பிரமண்யரை, இன்றும், (கர்நாடகாவில் உள்ள சுப்ரமண்யா என்னும் திருத்தலத்தில்) நாகராகத்தான் பிரதிஷ்டை செய்து வழிபடுகின்றார்கள். அந்த சுப்பிரமண்யரை நெற்றிப் பொட்டிலே இடிக்கச் செய்தால், அதுதான் ஆக்ஞா சக்கரம்; அழிக்கும் சக்தி ருத்ரன். ருத்ரன் அந்த நெற்றிக்கண் என்னும் ஆக்ஞா சக்கரத்தினால்தான் மன்மதனை அழித்தார். தலையில் உள்ள ஆயிரம் இதழ் தாமரையே சூரியன்.

ஒருவனுடைய நாபியிலிருந்து த்வனி (சப்தம்) வருவதால் அதுவே ப்ரஹ்மா. அதனால்தான் விஷ்ணுவினுடைய நாபியிலிருந்து ப்ரஹ்மா வந்தார் என்கின்றோம். ப்ரஹ்மாவிற்கு நான்கு முகம். நான்கு முகமும் நான்கு வேதங்கள். இதயத்தில் இருக்கும் ஆத்ம ஸ்வரூபமே விஷ்ணு. அதை ஒட்டி இருக்கக்கூடிய மனம்தான் விஷ்ணுமாயையான (விஷ்ணு சகோதரியான) துர்கை.

மனிதன், தான் நினைப்பதுபோல் அவ்வளவு அசக்தன் அல்லன். இந்திரிய நிக்ரஹம் செய்து, தியானம் செய்வானாகில் தேவனாக ஆகலாம். தெய்வமாகவும் ஆகலாம். ஆனால், அவன் அப்படி ஆவதற்கு ஒரு தெய்வீகத் தூண்டுதல் தேவை. எப்படிப் பாலைத் தயிராக மாற்றுவதற்கு, ஏற்கனவே பாலிலிருந்து தயிரான ஒரு தயிர் தேவையோ, அதுபோல்தான் இது. அந்த இறைத் தூண்டுதலைத் தருவதற்கான இறைசக்தியைத்தான், கோவிலில், நம்முடைய மஹரிஷிகள் சேமித்து வைத்துள்ளார்கள்.

எல்லா இடத்திலும் இருக்கும் சூரிய ஒளியின் உஷ்ணம் ஓர் இடத்தில் பூதக்கண்ணாடி வழியாக வரும்பொழுது அதிகமாவது போல்தான் இதுவும். கல்லிலும், மண்ணிலும், உலோகத்திலும் இறைவனுடைய சக்தி வெளிவருமா என்றால், இறைவன் சர்வ சக்தி வாய்ந்தவன். எல்லா இடத்திலும் வியாபித்திருப்பவன், எல்லாம் அறிந்தவன்; அவனுக்கு, தன்னுடைய பக்தன், இந்தக் கல், மண், உலோகம் மூலமாகத் தன்னைத்தான் வழிபடுகின்றான் என்பது தெரியாமல் இருக்குமா என்ன? பரமகருணையினால், அதன் மூலமாகவே அருள்பாலிக்கின்றான்.

''பகவான், பண்டரிபுரம், திருப்பதி, குருவாயூர், பூரிஜகன்னாதம் போன்றத் தலங்களில் பக்தர்களுடன் விளையாடி, அநேக லீலைகளை நடத்தியுள்ளான் என்பது எனக்குத் தெரியவில்லையே!'' என்றால், காந்தம் இரும்பைத்தானே இழுக்கும். மற்ற உலோகங்களை இழுக்கும் குணம் காந்தத்திற்குக் கிடையாது. அதுபோல், பக்தனுக்குத்தான் அந்த தெய்வ சாந்நித்யம் புரியும்.

கோவிலும், அதில் உள்ள அமைப்புகள் யாவும், அங்கு மஹரிஷிகள் தங்களுடைய தபோ பலத்தால் ஏற்படுத்தப்பட்டதாகும். அந்தத் தெய்வீக சக்தி, எப்படியெல்லாம் பாதுகாக்கப்பட்டால், அது குறையாது என்பதை அவர்கள், தங்களுடைய திவ்யஞானசக்தியால் கண்டுபிடித்துக் கொடுக்கப்பட்டதே, கோவில் வழிபாட்டு முறை.

அந்த முறையைச் சரியாகக் கடைப்பிடித்து வந்தால், அந்தச் சக்தி அங்கு குறையாமல் அப்படியே இருக்கும். அதில் தவறு ஏற்பட்டால் அந்தச் சக்தி குறைந்து விடும். அதனுடைய ஓர் அங்கம்தான் அபிஷேகமும். கோவில் வழிபாட்டு முறையில், இன்ன இன்ன திரவியங்களால் இறைவனுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும் என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. ஆயுர்வேதத்தில் மனிதனுடைய உடலில் உள்ள ஆன்மசக்தியைத் தூண்டுவதற்கு, மனிதனுக்கே பால், தயிர், இளநீர் இவற்றினால் குளியல்கள் உண்டு.

கோவிலுக்குச் செல்லும்பொழுது மட்டும் மனிதனுக்குப் பெரிய பரோபகார சிந்தனை வந்துவிடுவதும்கூட, இறைவன்மேல் ஆசையில்லாத மனதினுடைய ஓர் ஏமாற்றுவேலைதான். புதியதாகக் கோவில் கட்டவேண்டும் என்றால், இவ்வளவு கோயில் இருக்கின்றதே! இன்னும் என்ன புதுக்கோயில் என்று கேட்கின்றானே, ஒரு வாதத்திற்குக் கேட்கின்றேன்? அவனுடைய மனைவி அவனிடம் புத்தாடை கேட்கும்பொழுது, ஏற்கனவே துணிமணிகள் நிறைய உள்ளதே? மேலும் எதற்கு? என்று கேட்கின்றானா! அது வீணான செலவு இல்லையா? உலகத்தில் தொலைகாட்சி வீணான செலவு இல்லையா? ஆடம்பரமான வாழ்க்கை வீணான செலவு இல்லையா? ஆடம்பரமான உடை, உணவு வீணான செலவு இல்லையா? நாம் பொழுதுபோக்கு சாதனங்கள் என்று சொல்கின்றோமே! சினிமா, வீணான செலவு இல்லையா? கச்சேரி வீணான செலவு இல்லையா? கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுகள் வீணான செலவு இல்லையா? இறைவனுக்காகச் செலவழிப்பதை நினைத்துக் கண்ணீர்விட்டு அழும் இவர்கள், ஏன் இந்த வீணான செலவுகளை எல்லாம் நிறுத்திவிட்டு மற்றவர்களுக்கு உதவக்கூடாது? இவற்றில் எல்லாம் கோடிக்கணக்கான பணம் வீணாக செலவு ஆகின்றதுதானே! எளிமையான ஆகாரம், மறைவிடங்களை மறைத்துக்கொள்ள உடை; இவற்றைத் தவிர உலகத்தில் மற்ற எதுவும் தேவையற்றதுதானே!

கோவிலில் இறைவனுடைய நிவேதனத்தை நாம்தானே சாப்பிடுகின்றோம்! பால், தயிர், பஞ்சாமிர்தம் எல்லாவற்றையும் நாம் உபயோகபடுத்தலாமே! பொருளாதார ரீதியாகப் பார்த்தால், கோவிலும் பலருக்கு வேலை வாய்ப்பைத் தருகின்றதல்லவா!

கேளிக்கைகள், எப்படி மனதிற்குக் குதூகலத்தைத் தருகின்றனவோ, அதுபோல், துன்பத்தால் அல்லல் உறும் மனிதர்கள், தங்களுடைய மனபாரத்தைக் கோவிலில் உள்ள இறைவனுடைய திருவடியில் போட்டுவிட்டு மனநிம்மதி அடைகின்றார்கள். கோவில்கள் இல்லை என்றால், இன்று உலகத்தில் மனஇறுக்கம் என்னும் மனநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை, கணக்கில் அடங்காதது ஆகிவிடும். கோவில்களின் அமைப்பு, துன்பத்தில் அல்லல் உறுபவர்கள் உள்ளே வரும்பொழுதே, அவர்களுக்கு மனச்சாந்தியைத் தரும் விதத்திலேயே கட்டப்பட்டுள்ளது. வெய்யிலில் துன்புறுபவனுக்கு, எப்படி ஒரு மரத்தின் நிழல் தேவையோ, அதுபோல், இந்த சம்ஸார துக்கத்தில் சிக்கித் தவிக்கும் ஜீவனுக்கு, இளைப்பாறும் இடம்தான் கோவில். பகவான் ஸ்ரீ ராமக்ருஷ்ணர், விவேகானந்தருக்குத் தாம் பூஜை செய்யும் பவதாரிணி மூச்சு விடுவதையே காண்பித்து இருக்கிறார். ஒருவன், தன் சௌகர்யத்திற்காக ஆயிரக்கணக்கில் படோடோபமாகத் தேவையற்ற வழிகளில் செலவழிக்கின்றான். இறைவனுக்கு என்ற உடன் இவன் மனதில் பரோபகார சிந்தனை தலைதூக்கும்! என்ன ஏமாற்று வேலை?

சட்டம் தெரியவேண்டும் என்றால், சட்டநிபுணர்கள் சொல்வதே முடிவு! அதுபோல், அந்தந்தத் துறை விஷயங்களுக்கு அந்தந்தத் துறையில் வாழ்ந்துவரும் நிபுணர்களே சான்று! அவர்களுடைய முடிவே முடிவு! இறைவனைப் பற்றிய விஷயத்திற்கு, குப்பனும் சுப்பனும் பிரமாணமாகிவிட மாட்டார்கள். வேதமும், பண்டைய காலத்து ரிஷிகளும், சரித்திரக் காலத்துப் பக்தர்களும், சமகாலத்தில் வாழ்ந்த, வாழ்ந்துவரும் மஹான்களும்தான் இவற்றிற்குப் பிரமாணம். உலகத்தில் உள்ள அனைவரும் சேர்ந்து, இருக்கின்ற ஒரு பொருளை இல்லை என்று கூச்சலிடுவதால் இருக்கின்ற பொருள் இல்லாததாகி விடாது. அதுபோல், இல்லாத ஒரு பொருள் இருந்தும்விடாது. கோவில், இறைத்தத்துவம், இறைவழிபாடு என்பது நான் இப்பொழுது சொன்னதைவிட இன்னும் ஆழமானது. இப்போதைக்கு இதுபோதும்.'' என்று கூறி அந்த அன்பருக்கு விடையளித்தார்கள்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : 'ஞான திருஷ்டி' என்று கூறுகின்றார்களே! அப்படி ஒரு மூன்றாவது கண் என்று உடலில் உள்ளதா? நம்முடையக் கண்களைத் தவிர்த்துவிட்டு, நம்மால் ஒரு பொருளை எப்படி பார்க்கமுடியும்?*

பதில் : நாம், நம்முடைய கண்களால், இந்த புற உலகத்தைக் காண்கின்றோம். இரவில் நன்றாக தூங்குகின்றோம். அப்பொழுது, நம்முடைய கண்கள் மூடித்தான் இருக்கின்றன. அப்பொழுது, கனவு வருகின்றது. அந்தக் கனவை நன்றாகக் காண்கின்றோம். நம்முடைய கண்கள்தான் மூடியுள்ளதே! பின் எந்த கண்களால் அவற்றைக் காண்கின்றோம். மனகண்களினால் அவற்றை காண்கின்றோம். அந்த மனமே நன்றாக தூய்மையடைந்து தெய்வீகமாக மாறிவிட்டால், அந்த மனதினால் தெய்வீகம் காட்சிகளையும், தெய்வங்களையும் பார்க்கலாம். அந்தப் பார்வைக்குத்தான் 'ஞான திருஷ்டி' என்று பெயர்.

*கேள்வி : அவனுக்கு, மூக்கிற்குமேல் கோபம் வருகின்றது, என்கின்றார்களே! மூக்கிற்கு மேல் என்றால் என்ன?*

பதில் : மூக்கிற்கு மேல், இரு கண்களுக்கு இடையில் உள்ள சக்கரமே ஆக்ஞா சக்கரம். அது வழியாகத்தான், ஒருவருடைய கோபம், அழிக்கும் சக்தியாகவும் சாபமாகவும் வெளிப்படும். அப்படித்தான் பரமேச்வரன், மன்மதனை நெற்றிக்கண்ணினால் எரித்தார் என்று பார்க்கின்றோம். இதைத்தான், மூக்கிற்குமேல் கோபம் வருகின்றது என்கின்றார்கள்.

*கேள்வி : கடவுள் கடவுள் என்று சொல்லிக் கொண்டிருந்தால் உணவு கிடைக்குமா?*

பதில் : கடவுளையே வழிபட்டுக்கொண்டிருந்தால் உணவு கிடைக்கும் என்று நாமும் சொல்லவில்லை. ஆனால், கிடைத்த உணவை விழுங்க வேண்டுமானால், கடவுள் உடலுக்குள் இருந்தால்தான் நடக்கும். விழுங்கிய உணவு செரிக்க வேண்டும் என்றால், கடவுள் உடலுக்குள் இருந்தால்தான் நடக்கும்.

# மாதம் ஒரு புத்தகம்

''ஸ்ரீ ஞானானந்த தரிசனம்'' என்ற அற்புத நூல், தபோவனம் ஸ்ரீ ஞானாந்தகிரி ஸ்வாமிகளின் திவ்யசரிதம், அவர் திருவாய்மலர்ந்தருளிய சுவையான உபதேசங்கள் மற்றும் அவரது சன்னிதானத்தில் நிகழ்ந்த ஆச்சரியமான அருள்விளையாடல்கள் ஆகியவற்றின் ஒரு ரஸமான தொகுப்பாகும். ஸ்ரீமதி பத்மாஸினீ கோபாலகிருஷ்ணன் அவர்களின் மையக்கருத்தை, ஸ்வாமி நித்யானந்தகிரி அவர்கள் விரிவாக்கி, தபோவனம் ஸ்ரீ ஞானாந்த நிகேதனின் வெளியீடாக இந்நூல் வெளிவந்துள்ளது. இந்த நூல், படிக்கும் ஒவ்வொருவரின் மனத்திரையிலும், ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி ஸ்வாமிகள், முதலில் ஸித்தலிங்க மடத்திலும் பின்னர் திருக்கோவிலூர் தபோவனத்திலும் நிகழ்த்திய அற்புத லீலைகளை அப்படியே படம்பிடித்துக் காட்டுகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

1960-ஆம் ஆண்டு பங்குனி மாதம் மூன்றாம் குருவாரம், வழக்கம் போல் திரு. சிவவடிவேல் உடையார், தமது நண்பர் திரு. வடிவேல்பிள்ளை அவர்களுடன் குருவார தரிசனத்திற்காக சித்தலிங்கமடம் சென்றிருக்கிறார். அவர் தமது அனுபவத்தைக் கூறுகிறார்.

''தரிசனம் ஆன பிறகு பிரயாணத்திற்கு அனுமதி கோரும் குறிப்பாக ஸ்வாமிகளின் திருவடிகளில் நாங்கள் இருவரும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்கிறோம். குருநாதர், திருவேங்கடம் பிள்ளை என்ற அந்தரங்க பக்தரை அறிமுகப்படுத்திவிட்டு, ''மூவரும் ஒன்றாகவே பிரசாதம் அருந்தியபின் செல்லலாம்'' என்று கூறுகின்றார். திரு. ரங்கநாதன் என்பவர், ''அரைபடி அரிசி, ஐந்தாறு மாவடு, இரண்டு மூன்று வாழைக்காய், முருங்கைக்காய், சிறிது பச்சைமிளகாய் போன்றவைகள் இருக்கின்றன'' என்கிறார். ''இதுபோதும், பெரியவரிடம் கொடுத்து சமையல் செய்யச் சொல். பகல் 10 மணிக்கெல்லாம் இவர்கள் புறப்பட வேண்டும்'' என்று அன்புக் கட்டளையிடுக்கிறார் ஸ்வாமிகள்.

மணி ஒன்பது இருக்கும். சமையல் செய்த பெரியவர், பயபக்தியுடன், ஸ்வாமிகளை அணுகி, ''ஆகாரம் ஆயத்தமாகி

விட்டது ஸ்வாமீ'' என்று சொல்கிறார். அதே சமயம், ஒரு கிராமப்புறப்பெண், சுமார் ஐம்பது அறுபது எண்ணிக்கையுள்ள நுனிவாழை இலைக்கட்டையும், ஓர் அலுமினியச் சொம்பு நிறைய தயிரையும், ஸ்வாமிகள் எதிரே கொண்டுவந்து வைக்கிறாள். எருமை மாடு நன்றாக கன்று ஈன்றெடுக்க பிரார்த்தனை செய்தார்களாம். அதனால் தயிர் கொண்டு வந்து கொடுத்திருக்கிறாள். ஸ்வாமிகள் சிரித்துக்கொண்டே, ''வேண்டியதெல்லாம் வந்துவிட்டது. இனி நமக்கு வேண்டியதைப் பார்த்துக்கொள்வோமா?'' என்றவாறே எழுகிறார்.

தெருவாசலில் ஒரு காக்கி நிற ஜீப் வந்து நிற்கிறது. ஆறு ஏழு பேர் இறங்கி வருகிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குச் சென்று ஆன்மீக பிரச்சாரம் செய்வதாகக் கூறினார்கள். ஸ்வாமிகள் வந்தவர்களையும் உணவிற்கு அழைக்கின்றார். சாப்பாடு பரிமாறப்பட்டது. காலையில் எங்கள் முன்னிலையில், சமையலுக்கு என்னன்ன பதார்த்தங்கள் கொடுத்தனுப்பப்பட்டனவோ அவைகள்தான் உணவில் இடம் பெற்றிருந்தன. ''ஐந்தாறு பேருக்கு மட்டுமே வரக்கூடிய அந்த அரிசி எப்படி இத்தனை பேருக்கு உணவாக வளர்ந்தது'' என்று நாங்கள் வியந்தோம்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே ஒரு பஸ் வந்து நிற்கிறது. மணமக்களோடு ஐம்பது அறுபது பேர் கோஷ்டியாக இறங்குகிறார்கள். மணமகளுக்கு சற்று கால் ஊனமென்றும், சென்ற முறை ஸ்வாமிகளிடம் தரிசனம் செய்து, திருமணத்திற்கு பிரார்த்தனை செய்தபொழுது, ''பாவம்! ஊனம் உதாசீனப்படுத்துகிறது. கலக்கம் வேண்டாம். விரைவில் திருமணம் நடத்திவிட வேண்டுவோம்'' என்று அருள் செய்து பிரசாதம் தந்ததாகவும், திருமணம் நடந்துவிட்டதால் தம்பதிகளைத் திருமணத் தினத்தன்று, தரிசனம் செய்ய அழைத்து வந்ததாகக் கூறினார்கள்.

ஸ்வாமிகள் அதற்கு, ''குழந்தை தீர்க்க சுமங்கலியாக இருக்க வேண்டுவோம். திட நம்பிக்கையும், விடாமுயற்சியும், நமது கடமையில் வெற்றிக் காணச் செய்திருக்கிறது. சரியான நேரத்திலே இங்கே வந்திருக்கிறோம். புதுமணத்தம்பதிகளுக்கு இங்கே ஒரு விருந்து; சாதாரண விருந்து; நம்மோடு வந்திருக்கும் எல்லோரும் கலந்துகொள்வோம்'' என்று கூறினார். நாங்கள் மூவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொள்கிறோம். ''இந்த ஐம்பது அறுபது பேர் கொண்ட கூட்டத்திற்கு உணவு பரிமாற இங்கு என்ன இருக்கிறது'' என்ற குழப்பம்.

சமையலறையின் வாசலில் எங்களுக்கு உணவு தயாரித்த அந்தப் பெரியவர் நின்றுகொண்டிருக்கிறார். அந்தக் கதவு அரைகுறையாய் சாத்தப்பட்டிருக்கிறது. சில நொடிகளில் ஸ்வாமிகள் அந்த அறையிலிருந்து கதவைத் திறந்துகொண்டு வெளியே வருகிறார். அந்தப் பெரியவரைப் பார்த்து, ''தயக்கம் வேண்டாம்! இருப்பதை தாராளமாய் எடுத்துப் பயன்படுத்துவோம்'' என்று சொல்லிவிட்டுச் செல்கிறார். எங்களுக்கு எல்லாமே புதிராக இருந்தது. ஒன்றுமே புரியவில்லை. மெல்ல அந்தப் பெரியவரை அணுகினோம்.

''இத்தனை பேருக்கும் எங்கே சமையல் ஆகிறது ஸ்வாமி?''.

''இதோ; இங்கேதான்!'' என்று அந்த அறையைக் காட்டுகிறார் பெரியவர்.

''அத்தனைக்கும் சாமான்கள்?''.

''காலையில் உங்களுக்காகக் கொடுத்தனுப்பினாரே! அதுதான்!''

''அதையெல்லாம் தான் எங்களுக்கே பரிமாறிவிட்டீர்களே!''

''அதனால் என்ன? இருப்பவர்கள் சாப்பிட புதுசாமான்களா வேண்டும். சமையலறைக்கு நம்ம ஆண்டவன் ஒரு முறை வந்து சென்றால் போதாதா?'' என்றார் பெரியவர்.

திருமண கோஷ்டிக்கு விருந்து நடக்கிறது. பரிமாறும் பணியில் நாங்களும் பங்குகொள்கிறோம். இந்தப் பந்தியிலும் நாங்கள் சாப்பிட்ட அதே காய்கறிகள்தான் வந்துகொண்டிருந்தன. புதியதாக எதுவும் அங்கு வரவில்லை. பந்தி முடிகிறது. ஸ்வாமிகள் எல்லோருக்கும் விடைகொடுத்து அனுப்புகிறார். எங்களையும் அனுப்பி வைக்கிறார். எங்களுக்கோ ஒரே திகைப்பு! ஐம்பது அறுபது பேருக்குத் தேவைப்படும் உணவை, உடனே எப்படி தயாரிக்க முடிந்தது? எங்கிருந்து வந்தன சாமான்கள்? அதுவும் அந்த வதங்கிப் போன காய்கறிகள் எவ்வாறு பெருகின? ஸ்வாமிகளின் அருட்பார்வையே அத்தனையும் கொண்டு வந்துவிட்டதா? இல்லை அவரே நடமாடும் அக்ஷயப்பாத்திரமாகத் திகழ்கின்றாரா?

இத்தகைய நினைவுகள் அன்றைக்கு மட்டுமல்ல. இன்றைக்கும் இனிப்பூட்டிக் கொண்டே இருக்கின்றன!'' என்று நினைவு கூறுவதாக இருக்கிறது. இப்படி எத்தனையோ சம்பவங்கள் படிக்கப் படிக்க நம்மைப் பரவசபடுத்துகின்றன!

**— டாக்டர் ஆ. பாக்யநாதன்**

# எந்தரோ மஹானுபாவுலு - 96

ஸார்வபௌம பட்டாசார்யர், ஒரு பெரிய வித்வான். பெரிய ந்யாய சாஸ்த்ர பண்டிதர். அவரது சாஸ்த்ர ஞானம் மிகப் புகழ் வாய்ந்தது. மஹாப்ரபுவின் தர்சனத்திற்குப் பிறகுதான் அவரது ஹ்ருதயத்தில் பக்தி ஊற்றுச் சுரந்தது. அவரது வறண்ட ஞான வாழ்க்கையில், பூஞ்சோலையாக ஞானத்துடன் கூடிய பக்தி ஆறு பெருகியது. அவரது அபாரமான திறனாற்றல் அவருக்கு அளவற்ற புகழைத் தேடித் தந்தது. உத்கல தேசத்து ராஜாவான மஹாராஜா ப்ரதாபருத்ரன் அவரது ஸம்ஸ்க்ருத வித்யையால் கவரப்பட்டு அவரை அன்புடன் அழைத்ததால், அதை தட்டமுடியாமல் ஏற்று ஜகன்னாத்புரியில் அரசனது பாடசாலையில் ஆசிரியராகத் திகழ்ந்தார். இந்த சமயத்தில்தான், அவர் மஹாப்ரபுவை மூர்ச்சித்த நிலையில் புரிஜகன்னாதர் ஆலயத்தில் கண்டு தன் வீட்டிற்கு அழைத்து வந்தார்.

நினைவு வந்ததும், மஹாப்ரபு, ஸமுத்ர ஸ்னானத்திற்குச் சென்றார். ஸார்வபௌமர், சிறிது சிறிதாக மஹாப்ரபுவின் தேஜஸ்ஸினாலும் லாவண்யத்தாலும் தன்னை இழந்தார். மஹாப்ரபுவை மிகவும் அன்புடன் உபசரித்து, பக்தியுடன் அவருக்கு உணவளித்தார். ப்ரபுவும், ''உங்களுக்கு ஸ்ரீ க்ருஷ்ணனின் பதகமலத்தில் ப்ரீதி உண்டாகட்டும்'' என கூறினார்.

ஸார்வபௌமருக்கு மஹாப்ரபுவைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள ஆர்வம் ஏற்பட்டது. தனது உறவினரான கோபிநாத் ஆசார்யரிடம் அதுபற்றி வினவினார். அவர் சிரித்துக்கொண்டே, ஜகன்னாதமிச்ரரின் புத்திரரும், ஸ்ரீநீலாம்பர் சக்ரவர்த்தியின் பேரனுமான இவர் நவத்வீபத்தை சேர்ந்தவர்தான்'' என்றார். ஸார்வபௌமர், இருவரது தந்தையும் ஒன்றாகப் படித்தவர்கள் என்று தெரிந்ததும், அவரிடம் இன்னும் அதிக மரியாதை ஏற்பட்டு, ''ஆஹா! நீங்கள் எனக்கு மிகவும் நெருங்கியவராகிவிட்டீர்கள்! என் மதிப்புக்குரியவர் நீங்கள்!'' என்றார்.

மஹாப்ரபு, ''நான் உங்கள் மகனைப் போன்றவன். நீங்கள் ஞானத்திலும், வயதிலும், வித்தையிலும், அதிகாரத்திலும் என்னைவிட எவ்வளவோ உயர்ந்தவர்; என்னை நீங்கள் இன்று காப்பாற்றியது போல் எதிர்காலத்திலும் காத்தருள வேணும்'' என்றார். ஸார்வபௌமர், ''இனி தனியாக தரிசனத்துக்கு செல்ல வேண்டாம்'' என்று கூறி, ப்ரபு

ஏகாந்தமாக தங்குவதற்கு வசதியும் செய்து கொடுத்தார். அங்கு ப்ரபு தன் பக்தர்களுடன் தங்கலானார்.

கோபிநாத் ஆசார்யர், ப்ரபுவிடம் மிகவும் ப்ரேமபக்தி பூண்டவர். அவரை ஸ்ரீ நாராயணனாகவே **பா**வித்தார். ஒருநாள், அவர், ப்ரபு காலையில் எழுந்ததும், அவரை தரிசித்துவிட்டு ஸார்வபௌமரின் வீட்டுக்கு முகுந்ததத்துடன் வந்தார். ஸார்வபௌமர், ''நான் வேண்டுமானால் ப்ரஸித்தமானவர் மூலம் இவருக்கு சில கர்மாக்களை செய்விக்கட்டுமா?'' என்றார். இதைக்கேட்ட கோபிநாத் ஆசார்யர் வருத்தமுற்று, ''உங்களது புத்தி எப்பொழுதும் சாஸ்த்ர சந்தேகங்களையே எழுப்புகிறது.'' இவர், சாக்ஷாத் பகவான். இவருக்கு வெளிகர்மாவினால் ஆக வேண்டியது என்ன? உங்களது உதவி இவருக்கு தேவை இல்லை'' என்றார்.

ஸார்வபௌமர், ''நீங்கள் என்ன இவரை பகவான் என்கிறீர்களா?'' என்று வினவினார். ஆவேசத்துடன் கோபிநாத் ஆசார்யர், ''ஆமாம், பகவான்தான்! பகவான்தான்! பகவான்தான்! சத்தியமாக சொல்கிறேன்'' என்று கூற ஸார்வபௌமரும் அவரது சிஷ்யர்களும் சற்று அதிர்ந்து விட்டனர். பிறகு, கோபிநாத், ஸார்வபௌமரிடம், ''உங்களுக்கு புரியவைக்க என்னால் இயலாது'' என்றார். பிறகு, சிறிது நேரத்தில், ப்ரபுவைச் சந்திக்கச் செல்ல அந்த இடத்தை விட்டு நகர்ந்தனர். ப்ரபுவைச் சந்தித்து அவரை நமஸ்கரித்து, ஸார்வபௌமர் வீட்டில் நடந்தவற்றைக் கூறினார்கள். கோபிநாத் ஆசார்யர், ''ஸார்வபௌமர் என் உறவினராக இருந்தும் இப்படி எண்ணுகிறாரே! ப்ரபோ! தயைகூர்ந்து அவரை மாற்றுங்கள்! அவரது வாழ்வு ரஸபூர்ணமாக மாறவேணும். இதுதான் என் ப்ரார்த்தனை!'' என்றார்.

ப்ரபு, வெட்கத்துடன், ''ஆசார்யரே! ஏன் இப்படி பேசுகிறீர்கள்! ஸார்வபௌமர் எவ்வளவு பெரியவர். என்னிடம் புத்திரன் போல் வாஞ்சை காட்டுகிறார். புரியில் அவரைவிட என்னிடம் அன்பு செலுத்துபவர் யாருள்ளார்? அவர் என்னைப் பற்றி எது நினைத்தாலும் அது என் நலனுக்குகாகத்தான் இருக்கும். நீங்கள் அவரிடம் எப்பொழுதும் மரியாதையுடன் நடக்கவேண்டும்'' என்று வினயமாக கூறி தன் பக்தர்களுடன் ஸ்ரீக்ருஷ்ண சங்கீர்த்தனம் செய்ய ஆரம்பித்தார்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ சங்கரர் நூல்களில் ரஸானுபவங்கள் - 11

**- குடந்தை என். ராமசர்மா**

மோனத்தின் ஞானரஸம் ஸ்ரீ சங்கரர் வாக்கில் அமுதமாகப் பெருகுகிறது. 'நான்' என்பதன் உண்மைத் தத்துவமான ஆத்மாவின் நித்ய சொரூபத்தைக் காட்டிக் கொடுக்கிறார். இது ஒன்றாகவே இருப்பது. மாறுபாடற்றது, அழிவற்றது. ''எனவே, எப்போதும் கேவல சின்மாத்திரமாக இருக்கும் உன் உண்மை சொரூபத்தை நினைப்பாய், உணர்வாய். உணர்ந்து உள்ளொளி பெருக்கும் அத்தத்துவத்திலேயே எப்போதும் நிலைபெற்றவனாயிருப்பாய். நிலையான சுகம் உனக்குக் கிடைக்கும்'' என்கிறார்.

சரி, அதை எப்படி உணர்வது, தியானிப்பது? இரண்டற்ற ஒன்றை எப்படி தியானிப்பது? நான் இப்படி இருக்கிறேன் என்று சிந்தித்து அறிவதே வழி.

न चैकं तदन्यद् द्वितीयं कुतस्स्यात् न वा केवलत्वं न चाकेवलत्वम् ।
न शून्यं न चाशून्यमद्वैतकत्वात् कथं सर्ववेदान्त सिद्धं ब्रवीमि ॥

*ந சைகம் ததந்யத் த்விதீயம் குதஸ்யாத்*
*நவாகேவலத்வம் நசாகேவலத்வம் ।*
*ந சூன்யம் நசாசூன்யமத்வைதகத்வாத்*
*கதம் ஸர்வ வேதாந்த சித்தம் ப்ரவீமி ॥*

அது ஒன்றாகவுமில்லை. இதற்கு அந்நியமாக இரண்டாவது என்று மற்றொன்று எப்படி இருக்கமுடியும்? இது தனித்ததுமில்லை. தனித்து இல்லாததும் இல்லை. சூன்யமுமில்லை. சூன்யமற்றதுமில்லை. ஏனெனில் இது இரண்டற்ற ஒன்றாகவே இருக்கிறது.

வேதாந்த சித்தாந்தத்தை நான் எப்படித்தான் எடுத்துச் சொல்வேன்? வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாததை, மனதால் உணர்ந்து வாக்கால்தானே சொல்ல முடிகிறது. அத்விதீயமான அனுபவத்தை த்வைத பாஷையில்தானே சொல்லியாக வேண்டும்.

ஏன் ஆத்மாவை 'ஏகம்' ஒன்றாகவே இருப்பது என்று சொல்ல வேண்டும். இரண்டாவதாக என்று எதுவுமே இல்லாதபோது இதை வேறு எப்படிச் சொல்வது? ஒன்று என்று இருந்தால்தான் இரண்டாவது என்பது வரும். ஒன்றே இல்லையெனில் இரண்டாவதிற்கு ஏது இடம்? இது ஒன்றாகவுமில்லை. எல்லாமாகவும் இருக்கிறது.

ஒன்று என்றால், அது இரண்டிற்குள் அடங்கி விடும். இரண்டு மூன்றில் அடங்கும். எல்லாமாக இருக்கும் இதை ஒன்று என்றும் சொல்ல முடியாது. ஒன்றில்லை என்றும் சொல்ல முடியாது. எனவே, இதற்கு இரண்டாவது எப்படி வரமுடியும்? இரண்டற்றது அத்வைதம்.

"यन्मनसा न मनुते येनाहुर्मनोमतम् ।
तदेव ब्रह्मत्वं विद्धि ॥"

*''யந்மநஸா ந மநுதே யேநாஹுர் மநோமதம் ।*
*ததேவ ப்ரஹ்மத்வம் வித்தி ॥''*

''மனதால்கூட அதை நினைக்க முடிவதில்லை. ஏனெனில், மனது நினைப்பதே அதனால்தான். அதையே 'ப்ரஹ்மம்' என்று அறிவாய்,'' என்ற உபநிஷஅ

த் வாக்யத்தின் பொருளை, நம் நிலைக்கு இறங்கி வந்து தருகிறார் ஸ்ரீ சங்கரர். நம்மைக் கை தூக்கி, பிறவிக் கடலிலிருந்து கரையேற்ற வேண்டும் என்ற தவிப்பு. இதுவும் ஒரு ரஸமே.

... வளரும்.

**ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை**

Personal Secretary to

**H.H. SRI SRI MURALIDHARA SWAMIJI**

New No. 51, Old No. 24,
7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083
Telephone : 044-24895875
email ID : contact@madhuramurali.org

என்ற முகவரிக்கு அனுப்பவும்.

# பாலகர்களுக்கு ஒரு கதை - 99

ஒரு சமயம், ஒரு வழிப்போக்கன், வேலை நிமித்தமாக வெளியூருக்கு நடைபயணமாக சென்றுகொண்டிருந்தான். வழியில் ஒரு பெரியவரைப் பார்த்தான். அந்தப்பெரியவரும், இவனுடன் சேர்ந்துகொண்டார். அப்பொழுது அந்தப் பெரியவர், ஒரு மரத்தைப் பார்த்தார். பிறகு, அங்கேயே நின்றுவிட்டார். இதைப்பார்த்த அந்த இளைஞன், ''என்னப் பெரியவரே! அந்த மரம் உங்களுடன் பேசுகின்றதா?'' என்றான். அந்தப் பெரியவரும், ''அந்த மரத்தில் மிகப்பெரிய தேனடை இருக்கின்றதாம். அது, அந்த மரத்திற்கு மிகவும் பாரமாக இருக்கின்றதாம். நீ வேண்டுமானால் மரத்தில் ஏறி அந்த தேனடையை எடுத்து அதற்கு உதவிச் செய்யேன்!'' என்றார்.

அதற்கு அந்த வழிப்போக்கன், ''நான் ஒரு அவசரமான காரியமாக வெளியூர் பயணம் செய்துகொண்டிருக்கின்றேன். நீங்கள் வேண்டுமானால் அந்த மரத்திற்கு உதவி செய்யுங்கள்'' என்றான். இந்தப் பேச்சுக்களை கேட்டுக்கொண்டிருந்த ஒருவர், அந்த பெரியவரிடம் வந்து, ''நான் வேண்டுமானால் அந்த மரத்தின் பாரத்தை போக்கிவிடுகிறேன்'' என்றார். பெரியவரும், ''சரி'' என்று சொல்லிவிட்டு மேலே நடக்கலானார்.

சற்று நேரத்தில், அந்த மரத்தில் ஏறி அந்த தேனடையை அகற்றி, அந்த மரத்திற்கு உதவி புரிந்தவர், பெரியவரிடம் ஓடிவந்து, ''கொஞ்சம் நில்லுங்கள்! நீங்கள் சொன்னதுபோல் அந்த மரத்திற்கு உதவிபுரிய நினைத்து அந்த தேனடையை எடுத்தேன். அந்த தேனடையில் நிறைய தேன் இருக்கின்றது. மிகவும் சுவையாகவும் அபூர்வமான தேனாகவும் உள்ளது. இதை, நான் சந்தைக்கு எடுத்துச்சென்று விற்றால் நிறைய பணம் கிடைக்கும். உங்களுக்கு உதவி செய்ய நினைத்த எனக்கு பெரிய நன்மை செய்துவிட்டீர்கள். உங்களுக்கு என் வணக்கங்கள்'' என்று சொல்லிச் சென்றார்.

அந்தப் பெரியவரும், வழிப்போக்கனும் மேலே நடந்து சென்றார்கள். சற்று தூரம் நடந்துச் சென்றவர், ''களைப்பாக உள்ளது. சற்று இளைப்பாறலாமே!'' என்று கூற, இருவரும் ஒரு மரத்தினடியில் படுத்துக்கொண்டனர்.

அப்பொழுது அந்தப் பெரியவர், மரத்தினடியில் உள்ள பூமியில் காதை வைத்துக் கேட்டுக்கொண்டிருந்தார். அதைப் பார்த்த

அந்த வழிப்போக்கன், ''என்னப் பெரியவரே! இந்த மரமும் பேசுகின்றதா?'' என்றுக் கேட்டான். அதற்கு அவர், ''நான் இப்பொழுது எறும்புகளுடன் பேசிக்கொண்டிருக்கின்றேன்'' என்றார். அவனும், ''பரவாயில்லையே! அந்த எறும்புகள் என்ன சொல்கின்றன?'' என்று கேட்டான். பெரியவரும், ''எறும்புகள், அவை வசிப்பதற்காக பூமியில் ஒரு துளை செய்துகொணடு செல்கின்றன. அப்படிச் செல்லும்பொழுது, அதை ஏதோ ஒன்று தடுக்கிறதாம். அதனால் யாராவது உதவி செய்யுங்கள் என்று அந்த எறும்புகள் கேட்கின்றன!'' என்றார்.

மேலும் அந்த பெரியவர், ''தம்பீ! நீதான் இளைஞனாக இருக்கிறாயே! பாவம் இந்த எறும்புகளுக்கு உதவி செய்தால் என்ன? என்றார். அந்த வழிப்போக்கன் அதற்கு, ''நான் அவசரமாக ஒரு காரியத்திற்காக சென்றுகொண்டிருக்கின்றேன். என்னால் உதவ முடியாது! வாருங்கள், நம் பயணத்தைத் தொடரலாம்'' என்று சொல்லி கிளம்ப தயாரானான்.

இவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த ஒருவர், 'நாம் இந்த எறும்புகளுக்கு உதவி செய்யலாமே!' என்று எண்ணி மண்வெட்டியை எடுத்து அங்குத் தோண்ட, சிறிது நேரத்தில், ஒரு கல்லும், அதனடியில் ஒரு தங்கச் சொம்பு நிறைய தங்க நாணயங்களும் இருக்கக் கண்டார். அவருக்கு சந்தோஷம் தாங்கவில்லை. ஓடி அந்தப் பெரியவரிடம் வந்து, ''ஸ்வாமீ! நீங்கள் அங்கிருந்து கிளம்பியபிறகு, பாவம் எறும்புகளுக்கு உதவலாமே என்று எனக்குத் தோன்றியது. அங்கு தோண்டினால் ஒரு கல்லும், அதனடியில் புதையலும் கிடைத்தது. வறுமையில் வாடிய எனக்கு இது பெரிய வரப்பிரசாதம்'' என்று பெரியவர் கால்களில் விழுந்து வணங்கி சென்றார்.

அவர்கள், தங்கள் பயணத்தை தொடர்ந்துகொண்டிருந்தபோது, வழியில் ஒரு ஆறு. அந்த ஆற்றை படகில்தான் கடக்கவேண்டும். அப்படி இருவரும் படகில் பயணம் செய்யும்பொழுது, ஒரு மீனானது, துள்ளித் துள்ளி நீரினுள் சென்றது. அதைப்பார்த்த வழிப்போக்கன், பெரியவரிடம், ''என்னப் பெரியவரே! இப்பொழுது மீனுடன் பேசுகின்றீர்களா? என்றான். பெரியவரும், ''ஆமாம்! அதனுடைய வாயிலே ஏதோ முள் ஒன்று குத்தியிருக்கிறதாம். அந்த முள்ளை எடுத்துவிட வேண்டும் என்று அது சொல்கின்றது. நீ செய்கின்றாயா?'' என்றார். வழிப்போக்கனும், ''நான் முக்கியமான வேலையாக சென்றுகொண்டிருக்கின்றேன். என்னால் செய்யமுடியாது. வாருங்கள், நாம் கிளம்பலாம்'' என்று சொல்லி படகிலிருந்து இறங்கி அடுத்த கிராமத்திற்கு நடந்து சென்றுக்கொண்டிருந்தார்கள்.

படகில், அவர்கள் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டிருந்த படகோட்டி, அந்த மீனுக்கு உதவி செய்யலாம் என்று நினைத்து, அந்த மீனைப் பிடித்து, அதனுள் இருக்கும் முள்ளை எடுத்துப் பார்த்தபொழுது மீன் வாயினுள் ரத்தினம் ஒன்று இருப்பதைக் கண்டான். படகை, கரையில் சேர்த்துவிட்டு அந்தப் பெரியவரைக் கண்டு அவர் கால்களில் விழுந்து, ''ஸ்வாமீ! மீனிற்கு உதவி செய்ய நினைத்து, அதைப்பிடித்து அதன் வாயினுள் இருக்கக்கூடிய முள்ளை எடுத்துப்பார்த்தால், மீனின் வாயினுள் உயர்ந்த ரத்தினம் ஒன்று கிடைத்தது. உங்களுக்கு மிகவும் நன்றி'' என்றான்.

சற்றுநேரம் நடந்த பிறகு, மறுபடியும் அந்தப் பெரியவர், ஒரு இடத்தில் நின்றுவிட்டார். பெரியவர் வழிப்போக்கனிடம், ''இந்தப் பாறாங்கல் என்னிடம் பேசுகின்றது. இதற்கு இந்த இடத்தில் இருப்பதற்கு சிரமமாக இருக்கிறதாம். சற்றுத் தள்ளிவைக்கச் சொல்கின்றது'' என்றார். வழிப்போக்கன் யோசித்தான். 'இவர் சொன்ன ஒவ்வொரு காரியத்தையும் நாம் மறுத்து வந்தோம். ஆனால், வேறு ஒருவர் செய்தார்கள். அதனால், பெரிய பலனை அடைந்தார்கள். நாம் இந்த முறை பெரியவர் சொல்வதை மறுக்காமல் செய்ய வேண்டும். அதனால், நம் வேலை சற்று தாமதமானாலும் பரவாயில்லை. நாம் எப்படியாவது இந்த லாபத்தை அடையவேண்டுமென்று நினைத்து, மிகவும் கஷ்டப்பட்டு உடலிலுள்ள வலுவையெல்லாம் திரட்டி அந்தக் கல்லை ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு நகர்த்தி வைத்தான்.

ஆனால், அங்கு ரத்தினமும் இல்லை. புதையலும் இல்லை. இவனுக்கு ஒரு லாபமும் கிடைக்கவில்லை. உடனே, அந்தப் பெரியவரைப் பார்த்து, ''அவர்களுக்கெல்லாம் ஒரு லாபம் கிடைத்ததே! எனக்கு ஏன் ஒரு லாபமும் கிடைக்கவில்லை. நானும் இந்த கல்லிற்கு உதவிதானே செய்தேன்'' என்றான்.

அதற்கு அந்தப் பெரியவர், ''அவர்கள், அந்த உதவியைச் செய்யும்பொழுது, தங்களுக்கு லாபம் என்ன கிடைக்கப்போகின்றது என்ற எண்ணம் இல்லாமல், எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல், உதவி செய்யவேண்டும் என்ற ஒரே எண்ணத்துடன் செய்தார்கள். அதனால், பலனடைந்தார்கள். ஆனால், நீ முதலிலேயே என்ன லாபம் கிடைக்கப் போகின்றது என்று எதிர்பார்த்துச் செய்தாய். அதனால்தான் உனக்கு ஒன்றும் கிடைக்கவில்லை'' என்றார். இதிலிருந்து, எதையும் எதிர்பார்க்காமல் நாம் நன்மை செய்து கொண்டிருக்கவேண்டும் என்று தெரிகிறதல்லவா!

# மாலே மணிவண்ணா - 43

- மஹாவித்துவான் மயிலம் வே. சிவசுப்பிரமணியன்

பகவான், ஆய்ச்சியர்களோடு ஆடிய குரவைக்கூத்தைப் புகழ்ந்து துதித்தவர், அடுத்து அவர் ஆடிய மற்றொரு ஆட்டத்தை வைத்து தோத்தரிக்கிறார். அந்தத் திருநாமம் 'குடவல' என்பதாகும். குடங்கொண்டு கூத்தாடுதலில் வல்லமை உடையவனே என்பது இதன் பொருள். பெருமான் குடம்கொண்டு கூத்தாடியதை நினைப்பூட்டுகிறவகையில் அதையே தன் திருநாமமாகக் கொண்டு ஒரு திவ்யதேசத்தில் எழுந்தருளி இருக்கிறான்.

சீர்காழிக்கு அருகாமையில் உள்ள திருநாங்கூர் ஒட்டிய 'அரிமேய விண்ணகரம்' என்ற திவ்யதேசத்திலே, கிழக்கே திருமுகமண்டலம் கொண்டு, வீற்றிருந்த கோலத்திலே எழுந்தருளியுள்ள பெருமாள் 'குடமாடுகூத்தர்' என்ற திருநாமம் உடையவர் ஆகும். தாயார் அம்ருதகடவல்லி. எம்பெருமான் குடம்கொண்டு ஆடிய களைப்பினால் இங்கே நின்ற திருக்கோலத்தோடு சேவை சாதிக்காமல் வீற்றிருந்த திருக்கோலம் கொண்டார்போலும். திருமங்கைமன்னன் பத்துப் பாசுரங்களால் மங்களாசாசனம் செய்து இந்தப் பெருமானைப் பரவியுள்ளார். ***''குன்றதனால் மழை தடுத்துக் குடமாடு கூத்தன்''*** என்பது ஆழ்வாரது அமுதவாக்காகும்.

எம்பெருமானது சீலகுணத்தை ஆராதித்துச் சொல்ல முற்பட்டால், ஒரு குணத்தைக் கூட நம்மால் முழுவதும் சொல்லி நிறைவு செய்ய இயலாது. அத்தகைய குணப்ரபாவம் உடையவன் பகவான். பரத்துவ நிலையை அல்ல; தன்னைச் சேர்ந்தவர்களைப் பாதுகாக்க அவன் குடக்கூத்தாடின செயல் ஒன்றை மாத்திரம் சொல்லலாம் என்று புகுந்தாலும் சொல்லவொண்ணாமல் இருக்கும் என்று இக்குடக்கூத்தாடின நிகழ்ச்சியை நினைத்து ஆராமைப்படுகிறார் நம்மாழ்வார்.

*''கூறுதல் ஒன்று ஆராக் குடக்கூத்த அம்மானைக்*
*கூறுதலே மேவிக் குருகூர்ச் சடகோபன்*
*கூறின அந்தாதி ஓராயிரத்துள் இப்பத்தும்*
*கூறுதல் வல்லார் உளரேல் கூடுவர் வைகுந்தமே''*

என்ற திருவாய்மொழி இரண்டாம் பத்தில் ஐந்தாம் திருவாய்

மொழியின் பதினோராம் பாட்டைப் பார்க்கும்போது குடக்கூத்து ஒன்று தானும் சொல்லவொண்ணாததாக இருக்கும் என்று ஆழ்வார் வியப்பதை அறியலாம்.

தன் அவதாரச் சிறப்பு ஒன்றில் தன்னைச் சேர்ந்தாரைக் காப்பதற்கு பகவான் குடம்கொண்டு ஆடியதை எந்நாளும் பாகவதர்கள் அறிந்து அனுபவிக்கவேண்டி 'குடமாடுகூத்தர்' என்று திருநாமம் கொண்டு அர்ச்சாவதார மூர்த்தியாய்த் திவ்யதேசத்தை அலங்கரித்து நிற்கிற நிலை அவனது சௌலப்பியம் என்னும் எளிமை விளங்கும். எங்கே யாருக்காகப் பெருமான் குடம் கொண்டு ஆடினான் என்பதை ஒப்புயர்வற்ற தமிழ்க்காப்பியமாகிய சிலப்பதிகாரம் நமக்கு விளக்குகிறது.

வியூக நிலையிலே பிரத்யும்நன் என்கிற காமனது மகனாகிய அநிருத்தனைக் கனவில் கண்டு, காதல்கொண்டு, உஷை அவனைத் தன் அந்தப்புரத்தில் அழைப்பித்துக்கொண்டாள். உஷையைக் கூடி மகிழ்ந்து அவளது அந்தப்புரத்தில் இருந்த அநிருத்தனை உஷையின் தந்தையாகிய வாணாசுரன் சிறையில் இட்டான்.

அநிருத்தனைச் சிறை மீட்பதற்காக வாணாசுரனது சோணிதபுரத்தை முற்றுகையிட்டுப் போர் செய்தார் வாசுதேவ பகவான். போரில் வெற்றிபெற்றுச் சிறைமீட்டார் என்பது பாகவதம் கூறும் வரலாறு. அப்போது உலோகங்களாலும் மண்ணாலும் பல குடங்களைக் கொண்டு சோணிதபுரத்துத் தெருவிலே ஆடினார் திருமால் என்று திருமால் ஆடிய கூத்துவகைகளில் ஒன்றாகக் குடக்கூத்தைச் சிலப்பதிகாரத்தில் கூறுகிறார் இளங்கோவடிகள். சிலப்பதிகாரத்துக் கடலாடுகாதையில் பூம்புகார் நகரில் மாதவியாடிய 11 ஆடல்களைக் கூறும்போது இக்குடக்கூத்தைச் சொல்கிறார்.

*''வாணன் பேரூர் மறுகிடை நடந்து*
*நீள் நிலம் அளந்தோன் ஆடிய குடமும்*

(சிலப்பதிகாரம் - புகார்க்காண்டம் கடலாடுகாதை 54-55)

என்பது அப்பகுதி.

பஞ்ச லோகங்களாலும் மண்ணாலும் குடம்கொண்டு ஆடுதல் என்பதால் பல குடங்களை வைத்துத் தூக்கிப்போட்டு ஆடுதல் என்பது தெரிய வருகிறது. குடத்தாடல் ஐந்து உறுப்புடையது என்று அடியார்க்கு நல்லார் ஒரு பழைய நூற்பாவை மேற்கோள் காட்டிச் சொல்கிறார். மேலும் இது விநோதக்கூத்து ஆறினுள் ஒன்று என்கிறார்.

*''பரவிய சாந்தி அன்றியும் பரதம்,*
*விரவிய விநோதம் விரிக்குங் காலைக்*
*குரவை கலிநடம் குடக்கூத்து ஒன்றிய*
*கரண நோக்கு தோற்பாவைக் கூத்து*
*என்று இவை ஆறும் நகைத்திற்க சுவையும்*
*வென்றியும் விநோதக் கூத்து என் றுரைப்ப''*

என்ற பழைய நூற்பாவும் அடியார்க்கு நல்லார் உரையில் உள்ளது. அதனால், இக்கூத்து, காண்போர்க்கு சிரிப்பினைத் தரும் நகைச்சுவைப் பொருளாக நிகழும் கூத்து என்றுத் தெரிகிறது.

வெற்றிப் பெற்ற விழாவைக் கொண்டாடி அந்நகரில் உள்ளவர்களுக்கு மகிழ்ச்சி ஊட்டுகிற வகையிலே விநோதமாக இக்கூத்தினைப் பகவான் சோணிதபுரத்தில் நடத்தியிருக்கிறார் என்பதைக் காணும்போது, போரால் துன்புற்ற மக்களுக்கு மகிழ்ச்சியூட்ட தன்னை எளிமைப்படுத்திக்கொண்டு, 'மறுகு' எனப்படும் நாற்சந்தி முச்சந்திகளில் நின்று குடக்கூத்து ஆடினார் என்பது அவரது பேரருள் திறத்தை விளக்குவதாகும்.

நிலம் அளந்த பெருமான் என்று அவரது அளப்பரும் தன்மையை முதலிற்சொல்லி அப்படிப்பட்டவர் இப்படி மறுகிலே நடந்து ஆடினார் என்று பகவானது அருமையும் எளிமையும் காட்டி அழகு செய்கிறது சிலப்பதிகாரம்.

இனி, 'குடவல' என்ற பரிபாடல் வரியைப் பிரித்து, 'குட' என்று தனியே வைத்து, 'அல' என்று தனித்தோத்திரமாகச்செய்து, அலப்படை (கலப்பை)யை உடைய பலராமனே! என்று தோத்திரம் செய்ததாகப் பரிமேலழகர் உரை எழுதியுள்ளார். அப்படிப் பொருள் கொள்ளும்போது, கண்ணனாகப் குடக்கூத்தாட, கலப்பை தாங்கிப் பலராமனாக விளங்குகிறாய் என்று பகவானின் இரண்டு அவதாரங்களையும் சொல்லிப் பரவுவதாக அமையும்.

'குட அலவ' என்பது அகரம் கெட்டு செய்யுளாகலன் 'குட வல' என நின்றது.

(தொடரும்)

## ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் (தொடர்ச்சி)

ப்ருந்தாவனம் சென்ற கிரிஜாதேவி, ஸ்ரீராதாரமணன் கோவிலின் சேவையிலுள்ள ஸ்ரீ நீலமணிகோஸ்வாமி என்பவரின் வீட்டில் வாடகைக்கு வசித்தாள். ஸ்ரீ ராதாரமணன், கிரிஜாதேவியுடன் ப்ரத்யக்ஷமாகவும், கனவிலும், யார்மூலமாகவும் அவளுக்கு விதவிதமாகத் தரிசனம் தந்தான். நீலமணிகோஸ்வாமியைக் கிரிஜாதேவி, தீர்த்தகுருவாக மதித்தாள். கோஸ்வாமி, ஸ்ரீ ராதாரமணன் தியானத்தில் அமர்ந்திருப்பார். திடீரென்று, ஓர் ஆவேசத்தில் அவளுக்கு நிறைய உபதேசங்கள் செய்வார். நிறைய நேரம் ஸத்ஸங்கம் செய்வார். இந்த ஆவேசம் தீர்ந்தவுடன் அவருக்குத் தான் பேசியது எதுவும் நினைவில் இருக்காது.

க்ருஷ்ணனின் மஹாமந்த்திரத்தைக் கிரிஜாதேவி எந்நேரமும் ஜபம் செய்வாள். ஒருநாள், க்ருஷ்ணனின் இப்படிப்பட்ட லீலைகளால் கோபித்துக்கொண்டு, அவள் க்ருஷ்ண நாம ஜபம் செய்வதை நிறுத்திவிட்டு, ஸ்ரீ ராதாதேவியின் நாமத்தை ஜபிப்பது எனத் தீர்மானித்தாள். அன்று, கண்ணனும் ஒரு விசேஷமான லீலை செய்தான். அன்று நீலமணி கோஸ்வாமி, ஜுரம் ஏற்பட்டு ஜன்னியில் புலம்ப ஆரம்பித்தார். ''ஆரா ஊரைச் சேர்ந்த பெண்மணியைக் கூப்பிடு'' என்று பலமுறை உரக்கக் கூவினார். அவரது மனைவி, கிரிஜாதேவியை அழைத்து வந்தாள். அவள் வந்ததுமே நீலமணி கோஸ்வாமி அவளிடம், ''நீ என்னை விட்டுவிடுவாயா?'' என்று கூறி அழ ஆரம்பித்தார்.

கிரிஜாதேவிக்கு ஆச்சர்யமாகிவிட்டது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது கோஸ்வாமி, ''நீ இனி என் நாமத்தைச் சொல்லமாட்டாயா? ராதாவின் நாமத்தைத்தான் சொல்வாயா? உண்மையாகச் சொல், நீ என்னை விட்டுவிடுவாயா? விடமாட்டேன் என்று சொல்'' என்று கோஸ்வாமி மறுபடி பேசினார் ஜுரவேகத்தில். இப்போது கிரிஜாதேவிக்கு, கோஸ்வாமி மூலமாக யார் தன்னுடன் பேசுவது என்பது புரிந்துவிட்டது. கண்களில் கண்ணீர் பெருகியது! ''உன்னை விடமாட்டேன்'' என்று உறுதி அளித்தாள். அதே க்ஷணத்தில் கோஸ்வாமியின் ஆவேசம் கலைந்தது. உடனே அவர், கிரிஜாதேவியைப் பார்த்து, ''அம்மா! நீங்கள் ஏன் சிரமப்பட்டு என்னைப் பார்க்க வந்தீர்கள்?'' என்றார். கிரிஜாதேவி என்ன

சொல்வாள்? பேசாமல் வந்தனம் செய்துவிட்டு அங்கிருந்து அகன்றாள். கிரிஜாதேவி, தன் எண்ணங்களையும் **பா**வங்களையும் ரஹஸ்யமாக வைத்திருப்பாள். அவளைப் பார்த்து, சிறந்த பக்தை என்று யாராலும் கூற முடியாது. சாதுக்கள், அவளிடம் வருவார்கள். சிலர், அவளைப் பற்றி சந்தேகப்படுவார்கள். அவள் எதற்கும் கவலைப்படமாட்டாள். பகவான், தன் பக்தனைப் ப்ரகாசப்படுத்த வேண்டும் என நினைத்துவிட்டால், பக்தன் எத்தனை ஒளிந்து கொண்டாலும் பலன் இருக்காது. ஒருமுறை, ஸ்ரீ ராதாரமணனின் கோவிலில், ஸ்ரீரமாகாந்த் கோஸ்வாமி என்பவரின் சேவை நடந்து கொண்டிருந்தது. அவர், தமது சேவையை வேறொருவரிடம் ஒப்படைத்துவிட்டு, ஏதோ வேலை விஷயமாக மதுரா சென்றுவிட்டார். இரவு 12 மணிக்குத்தான் திரும்பி வந்தார். கிரிஜாதேவியும், மற்ற கோஸ்வாமிகளும் அவருடைய வரவை எதிர்பார்த்து அவரது வீட்டு வாசலில் நிற்பதைக்கண்டார். அவரைக் கண்டதும் கோஸ்வாமிகள், ''இன்று உங்களது சேவையில் குறை ஏற்பட்டுவிட்டது!'' என்றார்.

''என்ன குறை?'' என்றார் ரமாகாந்த் கோஸ்வாமி. ''பகவானுக்குச் சயன வேளையில் தீர்த்தப்பாத்திரம் வைக்கவில்லை'' என்று மற்றவர்கள் கூறினார்கள். ''அப்படியா! மிகவும் தவறாயிற்றே! உங்களுக்கு இது எப்படித் தெரியவந்தது?'' என்றார். ''ஸ்ரீக்ருஷ்ணன் இந்த அம்மாவிடம் சென்று 'தனக்குத் தீர்த்தப் பானை வைக்கவில்லை' என்று முறையிட்டு இருக்கிறான்'' என்றார்கள். ''ஏனம்மா! அப்படியா?'' என்று சந்தேகத்துடனும், ஆச்சரியத்துடனும் கிரிஜாதேவியிடம் அவர் வினவினார். அவளும், ''ஆமாம் மஹாராஜ்! என்னிடம் வந்து தனக்கு மிகவும் தாகமாக இருப்பதாகச் சொன்னான்'' என்றாள்.

ரமாகாந்த் கோஸ்வாமிக்கு இப்போது நம்பிக்கை ஏற்பட்டது. ''இவளைப்போய் தவறாக எடை போட்டோமே! க்ருஷ்ணனுக்கு இத்தனை வேண்டியவளாக இருக்கிறாளே! தன் வருத்தத்தை இவளிடம் கண்ணன் தெரிவித்துள்ளானே! முன்னொரு முறைகூட ஸ்ரீ ராதாரமணன் தன் வருத்தத்தை ஸ்ரீலலித்கிஷோர்ஜி என்ற மஹானிடம் தெரிவித்திருக்கிறானே!'' என நினைத்து, உடனே ஸ்னானம் செய்து, கோவிலுக்குள் ப்ரவேசித்தார். உண்மையிலேயே அங்கு ஜலத்துக்காக வழக்கமாக வைக்கும் பானை வைத்திருக்கவில்லை!

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 124

*தோடமில் நீ அகத்தோடொன்றி என்றும்*
*சந்தோடமென்றிட வருளருணாசலா* (தொடர்ச்சி)

தோடமில்-என்பது 'தோஷம் இல்' என்பதாகும். தோஷம் என்றால் சமஸ்கிருதத்தில் குற்றம் எனப் பொருள். 'தோடமில்' என்பது இங்கு குற்றமற்ற நிலையை குறிக்கிறது. எல்லா மனிதர்களுக்கும் ஏதோ ஒரு குறை இருந்தே தீரும். பகவானுக்குத்தான் குறை என்பதே கிடையாது. (குறை - குற்றம்). குறையற்ற பகவானை ''குறையொன்றுமில்லாத கோவிந்தன்'' என்கிறோம். பகவானுக்குக் குறை என்று ஒன்று இருக்குமானால் (அதாவது, வேண்டியவர் வேண்டாதவர் என்ற பட்சபாதம் போன்றோ, பயம் என்றோ ஒன்று) பகவானை வணங்குவதில் பயனில்லை என்றாகிவிடும். குறையற்றவனைத்தான் வணங்க வேண்டும்.

ஆதலால்தான், குருவானவர், குற்றங்களை அனைத்தையும் கடந்து, மனதை அழித்த பூரண ஞானியாக இருக்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. இப்படி குறையற்ற ஒருவரால்தான், மற்றொருவருக்குப் பூரணத்துவத்தை அருளமுடியும். குற்றமற்ற ஒருவர்தான் துக்கத்தைக் கடந்தவராகவும் இருப்பார்.

ஒரு பக்தர், பகவானுக்கு தினமும் பூஜை செய்வதை வழக்கமாகக் கொண்டு இருந்தார். மிகவும் அழகான அர்ச்சனை வரிகளைச் சொல்லும்பொழுது, இடையில் அந்த பக்தர், 'தரித்ராயை நம:' என்று சொல்லி, வில்வத்தை பகவானின் பாதங்களில் சமர்ப்பித்தாராம். தரித்திரன் என்றால் ஏழை என்று பொருள். ஈரேழு உலகங்களுக்கும் சொந்தமானவன் பகவான். அவன் எப்படி ஏழையாவான்? இந்த அர்ச்சனை பகவானையே தூக்கி வாரிப்போட்டதாம். ''நம்மை அனைவரும், நித்யத்ருப்தாயாயை நம: (என்றும் பூரண திருப்தி கொண்டவன்) என்கின்றனர். ஆனால், இவனோ நம்மை ஏழை என்கிறானே!'' என்று எண்ணி, அந்த பக்தர்

முன் தோன்றி, ''ஏன் என்னை தரித்திரன் என்கிறாய்?'' என்றான். பக்தர் இறைவனிடம், ''நீ ஏழைதான்'' என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார். பகவானுக்கு ஒரே ஆச்சரியம்! 'எவ்விதத்தில்?' என்று கேட்டான். ''அதை நிரூபிக்கவும் வேண்டும்'' என்றும் சொன்னான். பக்தர், பகவானை பூரணமாக அறிந்தவர். அவர் யாருக்கும் சளைத்தவரல்லர். அவர் அழகாய் பகவானிடம், ''உனக்கு சமமானவனையோ அல்லது உன்னை விட உயர்வானவனையோ காண்பிக்கமுடியுமா?'' என்றாராம். பகவானும் எங்கும் தேடிப்பார்த்து, அப்படி ஒருவர் இல்லை என திரும்பி வந்துவிட்டானாம். குற்றமில்லாதவன் அவன் ஒருவனே! ஆக, அவ்விஷயத்தில், ''தனக்குவமை இல்லாதவன்'' என்பதினால், பகவான் ஏழைதானே!

ஒரு பொருளிடம் நாம் அன்பு வைக்கும்பொழுது, மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில், அப்பொருள் நம்மை விட்டு பிரியுமாயின் நமக்கு துக்கம் நேரிடும். வெளிப்பொருள்களின் மீது அன்பு வைப்போமாயின், (உதாரணம், கார் போன்ற வாகனம்) அவை களவு போகலாம். சேதம் ஆகலாம். அதனால், நமக்கு துக்கம் ஏற்படும்.

மனிதர்கள் மேல் அன்பு வைத்தால், அதுவும் துக்கம் தரும். எப்படி எனில், நாம் அன்பு வைத்தவரிடமிருந்து ஏதோ ஒரு காரணத்தினால் நாம் விலகி வாழ நேரலாம். மேலும், அன்பு வைத்தவர், நம் மீது பதிலுக்கு அன்பு காட்டாமல் போகலாம். அல்லது அது குறையலாம். நமக்கோ, அவருக்கோ உடலில் நோய் வரலாம். அதுவும் துக்கம் தரும். நமக்கு முன் அவர் இறக்க நேரிடலாம். அப்பொழுது துக்கம் மிகுதியாக நேரும்.

ஆகையால், நாம் ஒருவரிடம் அன்பு வைப்போமாயின் அந்த அன்பு எப்பொழுதும் மாறாதிருக்க வேண்டும். அது, என்றும் வளர்ந்துகொண்டே இருக்க வேண்டும். என்றும் அழியாததாக இருக்கவேண்டும். நம்மை முழுவதுமாகப் புரிந்துகொண்டு, நாம் வைக்கும் அன்பைவிட, அதிகமான அன்பை நம்மிடம் வைக்க வேண்டும். எதிர்பார்ப்பு என்பது முழுவதும் அற்றதாக இருக்க வேண்டும். இது சாத்தியமாக வேண்டுமெனில், நாம் யார் மேல் அன்பு வைக்கிறோமோ அவருக்குக் குறையே இருக்கக்கூடாது.

அப்படி ஒருவரிடம்தான் அன்பு காட்ட வேண்டும். அழிவற்றவர், பூரணமானவர், தேவைகளே அற்றவர், அன்பைப் புரிந்து கொள்ளக்கூடியவர் என்றால், அது பகவான்தான். பூரண ஞானம் அடைந்த குருநாதர் பகவானின் மறுஉருவமே! ஞானியான ஸத்குரு, பகவான் ஆகியோரிடம் வைக்கும் அன்பு மேலும் மேலும் வளர்ந்து, எல்லையற்ற ஆனந்த நிலையை கொடுக்கும்.

பகவானும், ஞானியும் ஏன் குற்றமற்றவர்கள் என்றால், அவர்களுக்கு மனது என்பது இல்லை. மனது அற்றவரே குற்றமற்றவராவார்!

ஒருவரின் இதயத்துடிப்பானது ஒரு நிமிடத்திற்கு இவ்வளவு முறை இருப்பதுதான் சரி என்கின்றனர். அதுபோலவே, ஒருவரின் ஆயுள், இவ்வளவு 'மூச்சு' அளவுகள்தான் என யோக சூத்திரங்கள் அறிந்தவர்கள் சொல்கின்றனர். ஆகையால், முறையாக மூச்சை கட்டுப்படுத்துவோர், அதிக நாள் வாழ்வர்.

இந்த யோகசூத்திரக்காரர்கள், எண்ணங்கள் பற்றி வேறு ஒரு கணக்கும் சொல்கின்றனர். ஒரு சாதாரண மனிதன், சராசரியாக பதினாறு மணிநேரம் விழிப்பு நிலையில் கழிக்கிறான். எட்டு மணிநேரம் தூக்க நிலையில் எண்ணங்கள் இல்லை. விழிப்பு நிலையில் எண்ணங்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. ஒரு சராசரி மனிதனுக்கு, இந்த கால அளவில் இவ்வளவு எண்ணங்கள்தான் எழும் என்று அவர்கள் சொல்கின்றனர்.

இந்த மொத்த விழிப்பு நிலையில், வந்த மொத்த எண்ணங்களின் அளவில் நல்ல எண்ணங்களின் பங்கு அதிகம் எனின், அவன் நல்லவன் எனப்படுகிறான். மாறாக, அந்த எண்ணிக்கையில் தீய எண்ணங்கள் அதிகமிருப்பின், அவனை கெட்டவன் என்கிறோம். ஆனால், ஞானியோ, எண்ணங்கள் அற்றவர்.

(தொடரும்)

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# செய்திகள்

### பிப்ரவரி 28-ஆம் தேதி

ஸ்ரீ ஸ்வாமிஜி, ஆரணியை அடுத்த சேவூர் கிராமத்திற்கு விஜயம் செய்து, இரவு 7 மணி முதல் 8 மணி வரை அருளுரை வழங்கினார்கள். அங்கு நடைபெற்ற நாமசங்கீர்த்தனத்திலும் கலந்து கொண்டார்கள்.

### மார்ச் 10-ஆம் தேதி

ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீஸ்வாமிஜி, மதுரபுரியில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு, திருமஞ்சனம், பூஜை நிகழ்த்தினார்கள்.

### மார்ச் 12-ஆம் தேதி

வேலூர், சங்கரன்பாளையம் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி திருக்கோயிலில் இரவு 7 மணி முதல் இரவு 9 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி, அருளுரை ஆற்றினார்கள்.

### மார்ச் 16-ஆம் தேதி

ஓசூர், ஸ்ரீராம்ஜி காலனி, பகவான் யோகிராம்சுரத்குமார் பஜனை மந்திரில், ஸ்ரீ ஸ்வாமிஜி, இரவு 7 மணி முதல் இரவு 8 மணி வரை அருளுரை வழங்கினார்கள்.

### மார்ச் 18-ஆம் தேதி

தேனி மாவட்டம், பெரியகுளம், ஸ்ரீ வரதராஜப்பெருமாள் திருக்கோயிலிலும், மண்டபத்திலும், ஸ்ரீ ஸ்வாமிஜி அருளுரை வழங்கினார்கள்.

பெரியகுளத்தைச் சேர்ந்த திரு. ஹரேராம R. கிருஷ்ணகுமார் என்பவர், ஸ்ரீ ஸ்வாமிஜியின் விஜயத்தின்பொழுது ''ஹரே ராம....'' நகரசங்கீர்த்தனமும், அவரது இல்லத்தில் நாமசங்கீர்த்தன பஜனையையும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். இவற்றில், சிறுவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர் பங்குகொண்டனர்.

கெங்குவார்பட்டி கிராமத்திலுள்ள ஸ்ரீ ராமர் திருக்கோவிலுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி விஜயம் செய்து அருளாசி வழங்கினார்கள். அங்கு கூடியிருந்த அனைவரும், உற்சாகமாக, 'ஹரே ராம.....' நாமகீர்த்தனம் செய்தார்கள்.

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ப்ரேமிகவரதன் மருத்துமுகாம், மதுரபுரி

ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் ட்ரஸ்ட் சார்பில், ஸ்ரீ ப்ரேமிகவரதன் இலவச மருத்துவ முகாம் பிப்ரவரி 2006, மார்ச் 2006 எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் நடைபெற்றது.

பிப்ரவரி 26-ஆம் தேதி அன்று, சிறப்பு கண் மருத்துவமுகாம் ஒன்று, Dr. M. Mahalakshmi, Deputy Director, Saidapet, H.U.D மற்றும் Mr. Lawrence Prabakar, Ophthalmic Asst. அவர்களால் நடைபெற்றது.

மார்ச் 5-ஆம் தேதியன்றும் மார்ச் 12-ஆம் தேதியன்றும் கண் மருத்துவமுகாம் தொடர்ந்து நடைபெற்றன.

Dr. M. Mahalakshmi மற்றும் Mr. Lawrence Prabakar அவர்களுக்கு நமது அறக்கட்டளை சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- Trustees

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயில்

மஹாரண்யம் கிராமம், மலைப்பட்டு B.O, படப்பை P.O

### தமிழ்ப்புத்தாண்டு திருநாள் 14-04-2006

### நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| காலை 6.00 மணிக்கு | - | விஷுக்கனி தரிசனம் |
| காலை 7.30 மணிக்கு | - | திருமஞ்சனம் |
| காலை 10 முதல் மதியம் 3 வரை | - | அகண்ட ''ஹரே ராம......'' நாமசங்கீர்த்தனம் |
| மாலை 3 மணி | - | ஸ்ரீதேவீ, பூதேவீ சமேத ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸன் திருக்கல்யாண வைபவம் |
| மாலை 5 மணி | - | உள்வீதிப் புறப்பாடு |
| இரவு | - | டோலோத்ஸவம், மங்களாரதி |

தொடர்புக்கு : 044-24895875

## OTHER SATSANG PROGRAMMES

### CHAITANYA MAHAPRABHU NAMABHIKSHA KENDRA

Admin. Office: No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 600 083.
Ph : 044-24895875

On the auspicious occasion of
Tamil New Year's Day (14-04-2006),
you are cordially invited to attend a **Satsang** at

| | | |
|---|---|---|
| Place | : | MAIN HALL, Bharathiya Vidya Bhavan<br>Mylapore, Chennai - 600 004. |
| Date | : | Friday, the 14th April 2006. |
| Time | : | 7.00 - 9.00 P.M. |
| Talk in<br>English by | : | Sri M.K. RAMANUJAM, B.E.,<br>General Manager, Auto Components - MNC |
| TOPIC | : | **"THE POWER OF BHAGWAN NAMA"** |

Satsang by **KUM. POORNIMA KUMARASWAMY**

| | | |
|---|---|---|
| 2nd April -<br>5th April 2006 | : | **"Bhaktha Vijayam"** at<br>The Brahmanasamooham,<br>"Seetharama Mandir",<br>23/11, Gangadhara Chetty Road,<br>Bangalore - 42. |
| 7th April -<br>15th April 2006 | : | **"Srimad Ramayanam"**<br>Sri Namasankirtana Trust at<br>Srimad Abhinava, Vidhathirtha<br>Pravachana Hall, Ramsamaj, Ram Nagar,<br>Ramar Temple, Coimbatore - 641 009. |
| 27th April -<br>29th April 2006 | : | **"Bhaktha Vijayam"** at<br>Sri Srinivasa Perumal Temple, Singapore. |
| 2nd May -<br>8th May 2006 | : | **"Bhaktha Vijayam"** at<br>Asthika Samajam, Thiruvananthapuram. |

ஸ்ரீ ஹரி:

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகளின் விபரம்

| | |
|---|---|
| 09-04-2006 | ஏகாதசி — இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம் |
| 10-04-2006<br>இரவு 7-9 | அருளுரை — இடம் : ராம் நகர் வைதீக சபா,<br>சத்தியமூர்த்தி தெரு, ராம் நகர், கோயமுத்தூர் - 9.<br>தொடர்புக்கு : 98941 61819 |
| 12-04-2006<br>மாலை 6½ - 8 | அருளுரை — பங்குனி உத்திரப் பெருவிழா – எட்டாம்<br>படைவீடு திருமுருகனடியார்கள் இறைபணி சங்கம்<br>இடம் : திருவல்லிக்கேணி, சென்னை.<br>தொடர்புக்கு : 044-28445932 |
| 13-04-2006<br>14-04-2006 | தமிழ்ப் புத்தாண்டு தினத்தை ஒட்டி - ''ராதா கல்யாணம்''<br>இடம் : Dr. V. கனகராஜன்,<br>1273, 28வது தெரு, கம்பர் காலனி, அண்ணா நகர்,<br>சென்னை - 40. தொடர்புக்கு : 044-26180097 |
| 14-4-2006<br>மாலை 4½ மணி | பகவான் யோகி ராம்சுரத்குமார் அவர்களது<br>திருவண்ணாமலை சன்னதித்தெரு<br>கர்ப்பக்ருஹம் - திறப்புவிழா |
| 17-04-2006 | ''ஸ்ரீ சாந்தீபனி குருகுலம் - ஸ்ரீரங்கம்'' துவக்கவிழா<br>இடம் : ஸ்ரீரங்கம், திருச்சி<br>தொடர்புக்கு : 0431 - 2436299 |
| 23-04-2006 | ''வைதீகஸ்ரீ'' சார்பில் புத்தக வெளியீட்டு விழா<br>இடம் : பாரதீய வித்யா பவன், சென்னை |
| 24-04-2006 | ஏகாதசி - இடம் : மதுரபுரி, மஹாரண்யம் கிராமம். |
| 26-04-2006 முதல்<br>30-04-2006 வரை<br>இரவு 7 - 8½ | அருளுரை -<br>ஸ்ரீ சங்கர ஜயந்தி மஹோத்ஸவம்<br>இடம் : சுப்ரமண்ய நகர், கோடம்பாக்கம், சென்னை - 24. |
| 30-04-2006<br>காலை 7½ - 8½ | அதிதி ஆஸ்ரம சாமவேதபாடசாலை - திறப்பு விழா<br>இடம் : திருவண்ணாமலை |
| 03-05-2006<br>04-05-2006 | அருளுரை<br>குடியாத்தம் |
| 03-05-2006<br>காலை | ராஜகோபுர நுழைவாயில் - வாசக்கால் முகூர்த்தம்<br>இடம் : மறைமலைநகர் மாருதி சபா, மறைமலை நகர் |
| 05-05-2006<br>இரவு 6-8 | அருளுரை - ஸ்ரீ சீதாராம பஜனை மண்டலி<br>இடம் : வணிக வைத்திய தர்ம பரிபாலன சத்திரம்,<br>ராஜவீதி, பெரிய காஞ்சீபுரம். |
| 09-05-2006 | ஏகாதசி — இடம் : மதுரபுரி, மஹாரண்யம் |

**மங்களானி பவந்து**